# சமூகவிழுது

இதழ் 01 மின்சஞ்சிகை மார்ச்-2026



சமூக விஞ்ஞான மன்றம்

www.vncoe.edu.lk

# சமூகவிழுது
மின்சஞ்சிகை

இதழ்–01 மார்ச் –2026

## வெளியீடு

சமூகவிஞ்ஞான மன்றம்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
www.vncoe.edu.lk

## மலர்க்குழு

**ஆலோசனையும் வழிகாட்டலும்**

கலாநிதி திரு.க.சிவகுமார்

**அங்கத்தவர்கள்**

ந.காந்தரூபன்
ந.ஜீவராஜ்
உ.ருசாந்தினி

**கணணி வடிவமைப்பு**

நந்தகுமார் காந்தரூபன்


**அட்டைப்பட வடிவமைப்பு**

நடேஸ்வரன் லக்ஷன்










# வாழ்த்துச் செய்தி



வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியானது 21 ஆம் நூற்றாண்டிற்கான தரமான ஆசிரியர்களை உருவாக்கும் அளப்பரிய பணியினை ஆற்றி வருகின்றது மேலும் சமூக பெண் பரிமாணம் தொடர்பான வேலைத்திட்டங்களினை முன்னேற்ற பல்வேறு செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் கண்காட்சிகள், பெண் மாணவ ஆசிரியர்களுக்கான தலைமைத்துவ பொறுப்பு-க்கள், சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் போன்றவற்றை வருடாவருடம் சமூக விஞ்ஞான மன்றத்தின் துணையுடன் நிகழ்த்துகின்றது. அத்துடன் அம்மன்ற தொழிற்பாடுகளையும் ஊக்குவிக்கின்றது.

இந்த வகையில் 2026 ஆம் ஆண்டு வரலாற்றில் முதன்முறையாக வெளிவரும் E-சஞ்சிகையான **“சமூக விழுது”** சமூகவிஞ்ஞான மன்றத்தினால்**“பெண்களு-க்கான அதிகாரம் அளிப்பதன் மூலம் அனைவருக்குமான சமத்துவம் சமு-தாயத்தை உருவாக்குவாம்”** என்ற கருப்பொருளையொட்டி அமைந்துள்ளது. மேலும் பதவிகள், பணிகளில் இன்று பெண்களின் பங்கு உயர்வாக உள்ளதுடன் அவர்களுக்கான தலைமைத்துவ பொறுப்புக்களை வழங்குவதன் ஊடாக எதிர்கால சந்ததியின் இருப்புக்கான விருத்தி செய்ய முடியும் என நம்புகின்றேன். நவீன மாந்தர் மற்றும் தேவைகளுக்கேற்ப எமது செயற்பாடுகள் மற்றும் பங்களிப்புக்கள் மிக மிக இன்றியமையாதன. எனவே அவற்றையும் சமூக நலன் சார்பாக செயல்படுத்துவதிலும் எமது கல்லூரி முன்னிலையில் இருக்கிறது. அந்த வகையில் E-சஞ்சிகையாக இவை அமைந்திருப்பது காலத்தின் தேவையாக உள்ளது. இவை சிறப்பாகவும் வினைத்திறனாகவும் அமைவதற்கு அரும்பாடுபட்ட போசகர், ஆலோசகர்கள் மற்றும் மாணவ ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றியுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நன்றி**

திரு. கலாநிதி குணரத்தினம் கமலகுமார்
பீடாதிபதி,
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி,
வவுனியா

# வாழ்த்துச் செய்தி



மார்ச்- 8 சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சமூக விஞ்ஞான மன்றத்தினரால் வெளியீடு செய்யப்படும் "சமூக விழுதுகள்" சஞ்சிகைக்கு வாழ்த்து செய்தியியை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். ஆசிரியர் சேவையில் அதிகளவு பெண்களைக் கொண்டிருக்கும் இலங்கை திருநாட்டின் மகளிர் தின தேசிய கருப்பொருளாக (National Theme) **"நாட்டை கட்டி எழுப்பும் சவாலில் ஒன்றிணைந்து பயணிக்கும் திண்ணமான பெண்மை"** என்னும் பிரத்தியேக கருப்பொருள் தெரிவு செய்யப்பட்டு பெண் தொழில் முனைவோருக்கான சாதனை விழுதாக "திரிசக்தி" விருதும் வழங்கப்பட்டது. சர்வதேச பெண்கள் தின முக்கிய விடயமாக,

- ➔ சமூக நீதி
- ➔ பொருளாதார பங்களிப்பு
- ➔ தலைமைத்துவம்

அமைந்து விளங்குவதனால், உன் இலக்குகளை நோக்கி துணிச்சலோடு நட, உன்னால் முடியும் என அனைவரையும் வாழ்த்துவதோடு சமூகவிழுது சஞ்சிகை வெளிவர உழைத்த மன்ற போசகர், மாணவ ஆசிரியர்கள் அனைவரையும் மனதார பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**நன்றி**

திருமதி. லிங்கேஸ்வரி துணைவன்
உப பீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்)
தேசிய கல்வியியற் கல்லூரி வவுனியா

# வாழ்த்துச் செய்தி



**கல்லூரியின் ஆரம்பகால சஞ்சிகை "சமூக விழுதுகள் " பிரகாசிக்க வாழ்த்துக்கள்.**

எங்கள் கல்லூரியின் மிகப் பழமையான முதலாவது சஞ்சிகையான சமூக விழுதுகள் கல்லூரித் தாயின் பாதுகாப்பில் தொடர்ச்சியாக பல்வேறு இதழ் வடிவங்களில் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.ஆரம்ப காலத்தில் மாணவஆசிரியர்கள் கையெழுத்து சஞ்சிகை வடிவில் சிறப்பாக வெளியீடு செய்தனர் இன்றைய எங்கள் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி குணரத்தினம் கமலகுமார் அவர்கள் பல வருடங்களாக சமூக விஞ்ஞான மன்றத்தின் போசகராக கடமை செய்து சமூக விழுதுகள் சஞ்சிகையை ஆரம்பித்து பல வெளியீடுகளைச் செய்துள்ளார்.மதிப்பிற்குரிய பீடாதிபதி அவர்களின் சிந்தனையில் உருவாகிய சமூக விழுதுகள் சஞ்சிகை தொடர்ந்து ஆலோசகராக,போசகராக நான் சமூக விஞ்ஞான மன்றத்தில் கடமை செய்த போது மாணவ ஆசிரியர்களினால் கையெழுத்து சஞ்சிகையாகவும், தட்டெழுத்து வடிவ சஞ்சிகையாகவும் வெளியிடப்பட்டுள்ளது. சமூக விஞ்ஞான மன்றத்தின் சமூகப் பணிகள் செயற்பாடுகள் ஆகியவற்றுடன் மாணவஆசிரியர்கள் விரிவுரையாளர்கள் ஆகியோரின் ஆக்கங்களை இணைத்து இன்றைய சமூக விஞ்ஞான மன்றத்தினால் இலத்திரனியல் சஞ்சிகையையாக வெளியீடு செய்யப்படுவது சிறப்பியல்பாகும்.

சமூக விழுதுகள் இலத்திரனியல் சஞ்சிகை எங்கள் கல்லூரியின் மாதாந்த உத்தியோக பூர்வ இலத்திரனியல் சஞ்சிகையாக வளர்ச்சியடைந்து வெளி வரவேண்டும் என வாழ்த்துவதுடன் இம் முயற்சியில் அயராது இணைந்துள்ள மாணவ ஆசிரியர்களையும் மன்றத்தின் போசகர். ஆலோசகர்கள் யாவரையும் பாராட்டி வாழ்த்துவதுடன் கல்லூரித் தாயின் பெருமைகளை மாதாந்தம் பொக்கிஷமாக்கி ஆவணப்படுத்தும் உத்தியோக பூர்வ இலத்திரனியல் சஞ்சிகையையாக சமூக விழுதுகள் வெளியீடு செய்வதற்கு அனைவரும் இணைந்து சேவை செய்வோம் என உறுதியளித்து சமூக விழுதுகளாக ஆசிரியத்துவம் வளர்ச்சியடைய கல்லூரித்தாய் தொடர்பான சிறந்த ஆக்கங்கள், ஆவணங்கள் செயற்பாட்டு ஆதாரங்கள் மாணவஆசிரியர்களின் முயற்சிகள் அர்ப்பணிப்புக்களைப் பதிப்பித்து ஆவணப்படுத்துவோம். வாழ்க சமூக விழுதுகள், வளர்க ஆசிரிய சமூகம்

**நன்றி**

திரு கனகநாயகம் ஹரிஹரசக்தி (SLTES 1)
உப பீடாதிபதி (நிதி நிர்வாகம்).
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.
வவுனியா.

# வாழ்த்துச் செய்தி



"சமூக விஞ்ஞானம்" என்பது மனித உறவுகளையும் சமூக மாற்றங்களையும் கற்கும் ஒரு மிகச்சிறந்த கருவி. சமூக விஞ்ஞான மன்ற செயற்பாடுகள் வெறும் புத்தக அறிவோடு நின்றுவிடாமல் தன்னைச் சுற்றி உள்ள சமூகத்தை புரிந்து கொள்ள, பெரிதும் பொறுப்புள்ள குடிமகனாக மாற்ற, சமூக விழிப்புணர்வு செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கின்றது.

அந்த வகையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் இயங்கி வரும் சமூக விஞ்ஞான மன்றம், வருடந்தோறும் "சமூக விழுது" என்னும் சஞ்சிகையை வெளியீடு செய்து வருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைவதோடு இதில் வெளிவரும் ஆக்கங்கள் யாவும் வாசிப்போரின் உள்ளங்களில் எண்ண அதிர்வலைகளை ஏற்படுத்தவும், சமூகத்தில் மாற்றங்களை உண்டுபண்ணவும் வேண்டும் என எதிர்பார்த்து மன்ற உறுப்பினர்களை மனதார வாழ்த்தி நிற்கின்றேன்.

நன்றி

திருமதி.ச. ராஜு
உப பீடாதிபதி (தொடருறு கல்வி)
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.

# சமூகவிழுது

## உள்ளே..

1.பெயர் இல்லாது பேசப்படும் பெண்கள்
2.விலங்கொடித்தல்
3.சமூக ஒற்றுமையின் அவசியம்
4.வேலையும் வாழ்க்கைச் சமநிலையும் இன்றைய காலத்து பெண்களின் சவால்கள்
5.வியர்வை முத்துக்கள்
6.சமூக ஒற்றுமையின் அவசியம்
7.மகளிர் உரிமையும் அதனைப்பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவமும்
8.மாய வலை
9.நிகர் என நில்
10. பிறப்பே சகிப்பு
11. உளவியல் துறையில் பெண்கள்..
12. விடியலைத் தேடும் மானுடம்
13. சிறுவர் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு
14. சாதனைச் சிறகுகள்
15. மகளிர் தினம் வெறும் கொண்டாட்டமல்ல
16. இரு துருவங்கள்
17. கல்வியும் அதன் சமத்துவம்
18. தொழில்நுட்ப வளர்ச்சி சமூக வாழ்வியல் தாக்கங்கள்
19. சமூக நீதியின் அவசியம்
20. கிராமப்புற கல்வியின் சவால்கள்
21. ஆசிரியம்
22. மகளிர் தின விழிப்புணர்வு முதல் சமூக மாற்றம் வரை
23. பூமித்தாயின் கவசம்
24. கண்காட்சி புகைப்படங்கள்
25. சமூகத்தை கட்டியெழுப்புவதில் குடும்பத்தின் பங்கு
26. இளைஞர் சக்தி சமூக மாற்றத்திற்கு அடிப்படை
27. பெண்ணியமும் ஆசிரியத்துவமும்
28.



# பெயர் இல்லாது பேசப்படும் பெண்கள்

(பெரியபுராணத்தை அடிப்படையாகக் கொண்டது)

திருமதி லிங்கேஸ்வரி துணைவன்
உபபீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்)

பெரியபுராணம் ஒரு மாக்கதை. செயற்கரிய செயல்களை ஆற்றி-யோரின் சரித்திரத்தை குறிப்பிடும் சைவப் பேரிலக்கியம். திருமுறைகள் வரிசையில் பன்னிரெண்டாவதாக விளங்கும் இப்புராணம் அறிந்திதை. கமலினி, மாதினி, இசைஞானி, திலகவதி, மங்கையர்கரசி, புனிதவ-தி. பகவதி, சங்கிலியார், பரவை முதலியோரை பெயர் சுட்டியப் போதும் பல பெண்களை பெயர் சுட்டாது விட்டமை மிகப்பெரிய ஆதங்கத்தைத் தருகின்றது.

பெரிய புராணத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்றும். கற்புநெறி காக்க-ப்பட வேண்டும் என்பதற்காகத் "தீண்டுவீராகில் எம்மை திருநீல-கண்டம்" என கணவருக்கே கட்டளையிட்ட திருநீலகண்ட குயவ-னாரின் மனைவி பெயர் சேக்கிழார-ால் சுட்டப்படவில்லை. இங்கு அழகான, அன்பான, பண்புமிகு மனைவி வீட்டில் இருக்கவும் பரத்தை-தயருடன் உறவு கொண்ட கணவரை நல்வழிப்படுத்த முயன்றவர் திருநீல-கண்ட நாயனாரின் மனைவி

சிவனடியாருக்கும் பிள்ளைக்கறி சமைத்து உண்ணக் கொடுத்தவர் சிறுதொண்ட நாயனார். இவர் தன் மனைவியோடு இல்லற தர்மமும் இறைத்தொண்டு தர்மமும் காத்து நி-ன்றவர். இவர் சிவனடியார்களுக்குத் திருவமுது படைப்பதையே தனது பெருந்தொண்டாக எண்ணி அத்தொ-தாண்டில் குறையயேதும் வரா வண்ணம் தொண்டை காத்தவர். இவரது திருத்தொண்டிற்கு மிக மிக உறுதுணையாக இருந்தவர் மனைவியார். இவரது பெயர் என்ன?

இறைசோதனையால் வறுமையுற்ற போதும் செம்மையான இல்லற வாழ்வால் சிவத்தொண்டாற்றியவர் இளையான்குடிமாற நாயனார். அரசனிற்கு மந்திரி போல கணவனுக்கு மதிமந்திரியாக விளங்கியவர் இவரது மனைவி வீட்டில் உணவுவேதும் இல்லா நிலையிலும் சிவனடியாருக்கு திருவமுது படைக்க கணவனுக்கு மதிமந்திரியாக விளங்கி வழிகாட்டிய-வர். குறையை நிறைவாக்கியவர். இவர் உணவு சமைக்க விறகில்லாத போதும் வீட்டுக்கூரையே பிடுங்கி சமயோசிதமாக உணவு சமைத்தவர் இவரது பெயர் என்ன?

தொடரும்....................



# சமூக ஒற்றுமையின் அவசியம்

ஒரு துளி கடல் ஆகாது
ஒரு விழி உடலுக்கு ஒளி ஆகாது,
ஒரு உறுப்பு உடல் ஆகாது
பாரில் உண்மை ஒற்றுமை இன்றி
சமூகம் வாழாது.

பத்தொன்றில் ஓர் காகம் இறந்தால்
மற்றனைத்தும் கரையும்
அச்சோகம் தீர
மாந்தரின் கபடற்ற இன்முகம்
ஆக்கும் அறம் நிறைந்த ஓர் சமூகம்

வாழ்வில் தேவை மகிழ்ச்சி
அது இல்லையெனில் தொடரும் வீழ்ச்சி,
அரங்கேறும் மானிடரின் நாடக நிகழ்ச்சி
அது இல்லையெனில்
புனிதமடையும் சமூகத்தின் உயற்ச்சி

தனிமனிதன் கூட்டம் ஆகான்
தனித்திருந்தால் முன்னேறவும் மாட்டான்
சமூகம் எதிலடையும் முழுமை என
சொல்ல ஒன்றிணைவோம்
ஓர் குடும்பம் என.


Sr.ஏஞ்சலினா சுரேஸ்குமார்
2ம் வருட கிறிஸ்தவப் பிரிவு




# விலங்கொடித்தல்

சமையலறை எனும் சிறைச்சாலையில்,
சுவைமிகு உணவுகள் படைத்தாலும்,
அவள் விருப்பங்கள் மட்டும்,
அடுப்பங்கரையில் கருகிப் போகின்றன!
கல்வி கற்கும் உரிமையையும்,
கனவு காணும் சுதந்திரத்தையும்,
ஆணாதிக்கப் புன்னகையில்,
அடகு வைக்கும் அவலங்கள்!
பெண் என்பவள்,
தாய், மனைவி எனப் பெயர்களில்,
அடிமைச் சங்கிலியை,
அலங்காரமாய் அணிந்தவளா?
சம உரிமை வேண்டி,
சமூகத் தடைகளை உடைத்தெறிந்து,
சிறகடித்துப் பறக்க வேண்டும்.
அடிமைச் சங்கிலி உடைத்து!


மோகன் லோஷனா
உணவுத்தொழில்நுட்பம்



# வேலையும் வாழ்க்கைச் சமநிலையும் இன்றைய காலத்து பெண்களின் சவால்கள்

திருமதி.T.A. அபிராமி
விரிவுரையாளர்

இன்றைய நவீன உலகில் பெண்கள் கல்வி, தொழில், அரசியல், அறிவியல் போன்ற பல துறைகளில் முன்னேறி முக்கிய பங்காற்றி வருகின்றனர். குடும்பப் பொறுப்புகளையும் தொழில் முறைப் பொறுப்புகளையும் ஒரே நேரத்தில் சமப்படுத்த வேண்டிய நிலை அவர்களுக்கு உருவாகியுள்ளது. இதனால் பெண்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியதாக உள்ளது.

தொழில் புரியும் இடங்களில் திறமையுடன் செயற்பட வேண்டிய அழுத்தமும், குடும்பத்தில் தாய், மனைவி, மகள் போன்ற பல்வேறு பாத்திரங்களை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பும் பெண்களின் வாழ்க்கையில் முக்கிய இடத்தை பெறுகின்றன. இவ்விரு உலகங்களையும் சம நிலையாக நிர்வகிப்பதே வேலை வாழ்க்கை சமநிலை எனப்படுகின்றது.

எனினும், இன்றைய சமூகச் சூழலில் இந்த சமநிலையை பேணுவது என்பது பெண்களுக்கு எளிதான காரியம் அல்ல. குடும்ப எதிர்பார்ப்புகள், நேரமின்மை, மன அழுத்தம் போன்ற பல்வேறு காரணிகள் அவர்களின் வாழ்க்கையில் சவால்களை உருவாக்குகின்றன. எனவே, இன்றைய காலத்து பெண்கள் எதிர்கொள்ளும் வேலை வாழ்க்கை சமநிலை தொடர்பான சவால்களை பற்றி ஆராய்வது அவசியமானதொன்றாகும்.

இன்றைய பெண்கள் வீட்டின் பொருளாதாரத் தூணாக மட்டுமின்றி குடும்ப பராமரிப்பிலும் முக்கிய பங்காற்றுகின்றனர். அலுவலகப் பணிகளை முடித்துவிட்டு வீடு திரும்பும் ஒரு பெண்ணுக்கு மீண்டும் ஒரு வேளைத்தளமாக வீடு அமைகின்றது. சமையல், குழந்தை பராமரிப்பு என வீட்டிற்குள்ளும் அவர்கள் ஓயாது உழைக்க வேண்டியுள்ளது. இப்பொறுப்புகளுக்கு இடையே சமநிலையை பேணுவது மிகப்பெரிய சவாலாகும். வேலை-களையும் குடும்பத்தையும் ஒரே நேரத்தில் கவனிக்கும் போது ஏற்படும் நேரமின்மை (Time Poverty) பெண்களின் மன அழு-த்தத்தை அதிகரிக்கின்றது. தனக்காக செலவிட நேரமின்மை காரணமாக மனச்சோர்விற்கு ஆளாகின்றனர்.போதிய தூக்கம் இன்மை மற்றும் முறையற்ற உணவுப் பழக்கங்களால் இரத்த அழுத்தம், சோர்வு போன்ற ஆரோக்கிய குறைபாடுகள் ஏற்படுகின்றன.

மற்றுமொரு பக்கப்பார்வையில் நோக்கும் போது ஒரு ஆண் வேலையில் அதிக நேரம் செலவிடுவதை பெருமையாகப் பார்க்கும் சமூகம், ஒரு பெண் அவ்வாறு இருந்தால் "குடும்ப அக்கறையற்றவள்" என விமர்சிக்கி-ன்றது. இத்தகைய குற்ற உணர்வு பெண்க-ளின் தொழில் முறை வளர்ச்சியில் முட்டுக்-கட்டையாக அமைகின்றது.
பல நிறுவனங்களில் நெகிழ்வான வேலை நேரங்கள் இல்லாமை மற்றும் பண நெருக்கடிகள் பணியிடை வேறுபாடுகள் போ-ன்றவை பெண் முன்னேற்றத்தை தடுக்கின்றன. நீண்ட நேர வேலை, பயணம், அலுவலகப் பொறுப்புக்கள், வகை கூறல் போன்ற காரணங்களால் தமது சொந்த பிள்ளைகளுடன் செலவிடும் நேரம் குறைந்து விடுகின்றது. இதனால் பிள்ளைகள் பெற்றோரின் அன்பும் வழிகாட்டுதலும் குறைவாக பெறும் சூழல் ஏற்படுகின்றது. சில நேரங்களில் அவர்கள் தனிமை உணர்வு அல்லது ஆதரவு இல்லாமை போன்ற பிரச்சனைகளையும் சந்திக்க வேண்டிய-வர்களாக்கின்றனர். இருப்பினும், நேரத்தை சரியாக திட்டமிட்டு கிடைக்கும் நேரத்தை பிள்ளைகளுடன் செலவிட முயற்சிப்பது மிகவும் அவசியமாகும்.

இவை அனைத்தையும் தாண்டி பெண்கள் வேலையையும் வாழ்க்கையும் சமநிலைப்படுத்த பின்வரும் நடைமுறை உத்திகளை பின்பற்ற முடியும்.

**குடும்ப பொறுப்புக்களை பகிர்ந்து கொள்ளல்**

சமையல் முதல் குழந்தை பராமரிப்பு வரை கணவனும் மனைவியும் தமக்கிடையே உதவி செய்வது என்பதை தாண்டி எனது கடமை எனப் புரிந்து பரஸ்பர புரிந்துணர்வுடன் வேலைகளை பகிர்ந்து கொள்ளுதல் மூலம் இருபுற சமநிலையையும் பேண முடியும்.

**நிறுவனங்களின் நெகிழ்வுத்தன்மை**

தேவையான போது நெகிழ்வான வேலை நேரங்களை உருவாக்கவும், வீட்டிலிருந்து வேலை செய்யவும் வசதிகள் கிடைக்கும் போது அவர்களின் மன அழுத்தம் குறைவடைகின்றது.

**எல்லைகளை வகுத்தல்**

அலுவலக நேரத்தில் குடும்ப வேலைகளையும், குடும்ப நேரத்தில் அலுவலக வேலைகளையும் தவிர்ப்பது சிறந்தது.

**"இல்லை"என்று சொல்ல பழகுதல்**

அதாவது உங்களால் செய்ய முடியாத கூடுதல் பொறுப்புக்கள் அல்லது உங்களின் நேரத்தை வீணடிக்கும் தேவையற்ற அழைப்புக்களை பண்பாக மறுப்பதன் ஊடாக உங்கள் தரமான நோக்கத்தை பாதுகாக்க முடியும்.

**சுய பராமரிப்பு (Self Care)**

உடல்நலம் மற்றும் மனநலம் சரியாக இருந்தால் மட்டுமே வேலை வாழ்க்கை இரண்டையும் சமாளிக்க முடியும். போதிய உறக்கம், ஆரோக்கியமான உணவு, சிறு உடற்பயிற்சி, தியானம் மற்றும் யோகா போன்றவற்றுக்கு நேரம் ஒதுக்குதல் சிறந்தது.

**சரியான திட்டமிடல்**

இன்றைய நாள் மட்டுமின்றி அடுத்து வரும் நாட்களுக்கான முக்கிய விடயங்கள் தொடர்பில் முன்கூட்டியே திட்டமிடுதல் கடைசி நேர பதற்றத்தை தவிர்க்க உதவும்.

வேலை மற்றும் குடும்ப வாழ்க்கை ஆகிய இரண்டையும் சமநிலைப்படுத்துவது என்பது வெறும் நேர மேலாண்மை மட்டுமல்ல. அது ஒருவருடைய மன நிம்மதி மற்றும் வாழ்நாள் வளர்ச்சிக்கான அடிப்படைத் தேவையாகும். நிறுவனங்கள் வழங்கும் நெகிழ்வுத் தன்மை (Flexibility) குடும்ப அங்கத்தவர்களுக்கிடையிலான பரஸ்பர புரிந்துணர்வு என்பவை பெண்களுக்கு தடையற்ற தொழில் முறை பயணத்தை உறுதி செய்வதோடு குடும்ப உறவுகளையும் வலுப்படுத்த ஒரு பாலமாக அமைகின்றது.

இருப்பினும் வெளிப்படையான திட்டமிடல் பணிப் பகிர்வு மற்றும் சுய பராமரிப்பு போன்ற தனிப்பட்ட உத்திகளை பின்பற்றுவதன் மூலமே இந்த சமநிலையை முழுமையாக அடைய முடியும். சவால்கள் நிறைந்த இன்றைய சூழலில் நவீன தொழில்நுட்பங்களையும் முறையான அணுகுமுறைகளையும் கையாள்வது ஒரு பெண் தனது பணியிடத்திலும் இல்லத்திலும் ஒரு வெற்றிகரமான ஆளுமை நிறைந்தவளாக திகழ வழிவகுக்கும். சுருக்கமாக சொன்னால், சரியான திட்டமிடலும் நிறுவனங்களின் ஆதரவும் இணையும் போது வேலை  வாழ்க்கை சமநிலை என்பது ஒரு பெண்ணுக்கு சாத்தியமானதொன்றாகவே அமைகின்றது.

## உசாத்துணை நூல்கள்


- நேர மேலாண்மை நிவேதிதா லூயிஸ்
- வெற்றி நிச்சயம் எம் எஸ் உதயமூர்த்தி
- UNESCO மற்றும் ILO அறிக்கைகள்







கதிரவன் சுடுமுன் களம் புகுந்து
கடின உழைப்பால் கவிதை எழுதும்...
இந்த மண்ணின் உயிர்ப்புள்ள சிற்பிகள்!
நெற்றியில் அரும்பும் நீர்த்திவலைகள்
அவை
நிலம் தின்னும் வெறும் துளிகளல்ல
தரிசு நிலத்தைத் தங்கமாக்கும்
தன்னம்பிக்கை விதைகள்!
சேற்றில் கால் பதித்து
சோற்றினை உலகுக்கு ஈயும்...
விவசாயியின் மேனி வழியும்
புனிதத் தீர்த்தம்!
சிமெண்ட் மணலோடு சிநேகம் கொண்டு
சிகரங்கள் முட்டும் கோபுரம் எழுப்பும்...
கட்டுமானக் கலைஞனின் கைகளில் மின்னும்
கௌரவப் பதக்கங்கள்!
பசி தீர்க்கப் பாடுபடும் கரங்கள் - அந்தப்
பயணத்தில் சிதறும் வியர்வைத் துளிகள்...
நாட்டின் பொருளாதாரத் தேரை
நகர்த்திச் செல்லும் நவரத்தினங்கள்!
உழைப்பால் நனைந்த சட்டைக்குத்
தெரியும் - இந்த
உலகை ஆளும் ரகசியம்!
சிந்துங்கள் வியர்வையை...
அதுவே நாளை உங்கள் சந்ததி சூடும்
வெற்றி முத்துக்கள்!

S.A கலைமகள்
உணவுத்தொழிநுட்ப பிரிவு




மனிதனுக்குள் மனிதனை தேடிய
பொழுதுகளில் பிறந்ததுவோ
மனிதநேயம்.
காரிருள் சூழ்ந்த இரவினில்
வெளிச்சமாய் தோன்றிடும் விடி வெள்ளிகளாய்
வலிகளிலும் தோன்றியதோ
இம் மனிதநேயம்....
கண்ணீரின் மொழிகளுக்கு
மொழிபெயர்ப்பு தேவையில்லை
கருணை கொண்ட உள்ளமே போதும்.
பசியின் அழைப்பினில்
மதங்கள் தொடர்புருவதில்லை...
வழியினில் துடிப்பவனை
தூக்கிவிடும் கைகளில்
வரலாறு எழுதப்படுவதில்லை
ஆயினும் எதிர்காலங்கள்
எழுதப்படுகின்றன...
சிறு புன்னகை பகிர்ந்த போதிலும்
நம்பிக்கைகள் துளிர்விடுகின்றனவோ,
அதுதானே மனிதநேயம்....
இன, மத வேறுபாடுகளின்றி
இதயங்களின் எண்ணங்களில்
நெருங்கிடும் உணர்வே
அது....

AR.Fathima Afroz
Second National Language Tamil




இ.செல்வகுமார்
விரிவுரையாளர்

# மகளிர் உரிமையும் அதனைப்பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவமும்

மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திலும் நாகரீக வளர்ச்சியிலும் பெண்கள் மிக முக்கியமான பங்காற்றுகின்றனர். ஒரு குடும்பத்தின் அடித்தளமாகவும் சமூகத்தின் வளர்ச்சிக்கான வேராகவும் பெண்கள் விளங்குகின்றனர் எனவே பெண்களுக்கு உரிய மரியாதையும் உரிமைகளும் வழங்கப்படுவது மிக அவசியமான தொன்றாகும் பெண்களுக்கு வழங்கப்படும் அடிப்படை உரிமைகளே மகளிர் உரிமைகள் எனப்படுகின்றன.

மகளிர் உரிமைகள் என்பது பெண்களுக்கு ஆண்களுக்கு இணையாக வழங்கப்பட வேண்டிய கல்வி வேலை வாய்ப்பு சொத்துரிமை சுதந்திரம் பாதுகாப்பு மற்றும் சமூக மரியாதை போன்ற அடிப்படை உரிமைகளை குறிக்கின்றது மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள் என்பதே மனித நேயத்தின் அடிப்படை தத்துவமாகும் அதனால் பெண்களும் ஆண்களைப் போலவே சம உரிமையுடன் வாழ வேண்டும்

பழங்காலங்களில் பல சமுதாயங்களில் பெண்கள் ஒதுக்கப்பட்ட நிலையில் இருந்தனர் கல்வி கற்கும் வாய்ப்பு, சமூகத் தீர்மானங்களில் பங்கேற்கும் வாய்ப்பு போன்றவை பெண்களுக்கு குறைவாக இருந்தன ஆனால் காலப்போக்கில் சமூக விழிப்புணர்வு அதிகரித்ததன் காரணமாக பெண்களின் நிலைமை பெரிதும் மேம்பட்டது என்று பெண்கள் கல்வி அரசியல் விளையாட்டு தொழில் போன்ற பல துறைகளில் சிறந்து விளங்குகின்றனர்.

மகளிர் உரிமைகளை பாதுகாப்பதற்காக அரசாங்கம் பல சட்டங்களையும் செயற்பாட்டு திட்டங்களையும் உருவாக்கியுள்ளது. பெண்களின் கல்வியை ஊக்குவித்தல் வேலைவாய்ப்பில் சமவாய்ப்பு வழங்குதல் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்கும் சட்டங்களை கடுமையாக அமுல்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் அவற்றில் அடங்குகின்றன இதனுடன் சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் பெண்களை மதிக்கும் மனப்பான்மை வளர்த்துக் கொள்ள வேண்டும்

சுருக்கமாக கூறினால் மகளிர் உரிமைகள் என்பது ஒரு தனிப்பட்ட பிரச்சினை அல்ல அது ஒரு சமூகத்தின் நாகரிகத்தை காட்டும் அளவுகோலாகும் பெண்களின் உரிமைகளை மதித்து பாதுகாக்கும் சமூகமே சமத்துவம் அமைதி மற்றும் முன்னேற்றம் நிறைந்த சமூகமாக உருவெடுக்கும் எனவே மகளிர் உரிமைகளை மதித்து பாதுகாப்பது ஒவ்வொருவரின் பொறுப்பாகும்






# மாய வலை

விரல் நுனியில் உலகம் வந்ததென்று
வியந்து நாம் நிற்கையில்,
விஷமாய் எங்கும் பரவி நிற்கிறாய் நீ!
அறிவியல் மலர்த்திய அழகிய
பூவிதழ் நீயென நினைக்கையில்,
அடுத்த நொடியே...
உண்மையை மண்ணில் புதைக்கும்
அழுகிப்போன வேரும் நீயே!
ஆயுதம் ஏதுமின்றிப் போர் தொடுத்து,
அன்பைச் சிதைக்கும் அபாயமும் நீயே!
சாதி மதத் தீயை மூட்டி,
சந்தேக விதையை மனதில் நாட்டி,
அறியாமையை அறிவில் புகுத்தி,
"மெய்" எனும் சொல்லை மெதுவாக விரட்டி,
அப்பாவி மனிதனைப் பழிவாங்கும்
போலிச் செய்தியும் நீயே!
இத்தனைக்கும் பின்னே...
பாமரனே!
நீ பழிச்சொல் வீசும் முன் ஒருமுறை பார்...
இங்கே புதைக்கப்படுவது உண்மைகள் மட்டுமல்ல
உயிருள்ள நல்ல உள்ளங்களும் தான்



S.A நவோதினி
இரண்டாம் தேசிய மொழி தமிழ்




# நிகர் என நில்

விண்ணில் பாதி மண்ணில் பாதி
வீசும் காற்றில் ஏது ஜாதி?
கனவு காணும் கண்களுக்கு
ஆண் பெண் என்ற நிறமில்லை

சமத்துவமே சமூகத்தின் வேர் -அதை
தாங்கிப் பிடிப்பதே மனிதப் பண்பு
தோளோடு தோள் சேர்ப்பது வெறும்
காதல் மட்டுமல்ல அது சமூக நீதி!

அவள் சுமப்பது வெறும் குடும்பமல்ல
இந்த தேசத்தின் எதிர்காலம் -அவள்
பகிர வேண்டியது வெறும் பாரமல்ல
அவளுக்கான சமமான உரிமைகள்

சமையல் என்பது கலையே
அது ஆணுக்கும் அவசியமான அறிவே!
வெளியுலகம் என்பது களமே அது
பெண்ணுக்கும் உரித்தான இடமே

கட்டுப்பாடுகள் எனும் கூட்டினை திறந்து
கதவுகளை காற்றிற்குத் திறந்து விடு!
அவள் பறக்கத் துடிப்பது உன்னை வீழ்த்த அல்ல
உன்னோடு சேர்ந்து வானைத் தொட

இருகரங்கள் இணைந்தால் தான் ஓசை பிறக்கும்
இருபாலினமும் சமமானால் தான் தேசம் சிறக்கும்
பாலினம் கடந்து மனிதனாகப் பார்ப்போம்
சமத்துவ சுடரை ஏற்றி சமூக இருளை நீக்குவோம்.



அழகர் தர்ஷிகா தினுஷ் கௌரி
இரண்டாம் தேசிய மொழி தமிழ்




வரிகளுக்குள் அடங்காத கண்ணீர் துளிகள் ..
தேடலில் சிக்காத அழுகை குரல்கள்...
கதைகளால் பேசாத ஆறா வடுக்கள்...
தாரமும் தாயுமாய் கொத்தடிமைகள்...

சுட்டெரிந்த தீ பந்தம் பற்றமுன்னே
சாம்பலாகிறது..
தீட்டப்பட்ட கத்திமுனை குத்த
முன்னே மழுங்கடிக்கப்படுகிறது...
அழகிய பூந்தோட்டம் அழுகி மயானமாகிறது...
முழங்கிய பெரும் மழை
அணைகளுக்குள் முடங்கிப் போகிறது...
இத்தனையும் அவள்
ஒருத்தியைத்தான் பறைசாற்றுகிறது...

சடங்கு என்று தொடக்கி வைக்கிறாய் ...
தொடக்கென்று ஒதுக்கி விடத்தானே...

தொட்டில் கொடி ஏற்றி வைக்கிறாய்...
அவள் தொப்புள் கொடி அறுத்த பின்பு தானே...
மனக்கோலம் போடச் சொல்கிறாய்..
அவள் பிறந்த மனை பிரிந்திட தானே...

கட்டிலுக்கு தொட்டுக் கொள்கிறாய் ...
அவள் கனவுகள் அடக்கிட தானே...

நீ அவளை ஏமாற்ற...
அவள் ஏமாறுவது போல்
நடித்துக் கொண்டே இருக்கிறாள்...
அவள் பெருமூச்சு மட்டும் அடிக்கடி சொல்கிறது...
நான் ஏமாறவில்லை சகித்து கொள்கிறேன் என்று...


I.M வலீத்
விஞ்ஞானப்பிரிவு

# உளவியல் துறையில் பெண்கள்..



திருமதி. ஷர்மிளா பிரகாஷ்
விரிவுரையாளர்

உளவியல் என்பது மனிதர்களின் நடத்தை, சிந்தனை, உணர்வு, மனநிலை என்பவற்றை ஆய்வு செய்யும் அறிவியல் துறையாகும். உளவியல் துறையில் ஆண்களின் பங்களிப்பை மிஞ்சுமளவு இன்று பெண்களின் பங்கு மேலோங்கியுள்ளது. ஆரம்ப காலங்களில் பெண்களுக்கு கல்வி வாய்ப்புக்கள், ஆராய்ச்சிகள், அரசியல் வாய்ப்புக்கள் குறைவாக இருந்த போதிலும் தற்காலத்தில் பெண்கள், ஆண்களுக்கு சரிநிகராக அனைத்து துறையிலும் காத்திரமான அளவு பங்களிப்பை நல்கி வருகின்றனர். அந்த வகையில் பெண்கள் உளவியல் துறையில் ஆற்றிய பங்களிப்புகளை நோக்குவோம்.

உளவியல் துறையின் முதலாவது பெண் அறிஞராக விளங்குபவர் Mary Whiton Calkins ஆவார். இவர் நினைவாற்றல் மற்றும் சுய உணர்வு தொடர்பான ஆய்வுகளில் முக்கிய பங்களிப்புச் செய்தார்.

புகழ் பெற்ற உளவியல் அறிஞர் சிக்மண்ட் புரொயிடின் மகள் Anna Freud குழந்தைகளின் மனநிலைகள், பாதுகாப்பு முறைகள், மன அழுத்த தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு குழந்தைகளின் மனநலத்தை பாதுகாக்கும் பல கருத்துக்களை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்.

அதே போல் Melanie Klein என்பவர், குழந்தையின் மன அழுத்த ஆய்வுகளில் ஈடுபட்டு Play Therapy மூலம் குழந்தைகளின் மன அழுத்தத்தை தீர்ப்பதற்கான புதிய உளவியல் ஆலோசனை முறைகளை உருவாக்கினார்.

Karen Horney என்ற பெண்ணிய உளவியல் அறிஞர், பெண்களின் மனநிலை மற்றும் சமூக சூழல் அவர்களின் தன்மையை எப்படி பாதிக்கின்றது? என்பதை ஆய்வு செய்து பெண்களின் அனுபவங்களையும் சமுதாயத்தில் உள்ள சமத்துவமின்மையையும் கருத்திற்கொண்டு புதிய உளவியல் பார்வையை வழங்கினார்.

இலங்கையிலும் பல பெண்கள் உளவியல் துறையில் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை ஆற்றி வருகின்றனர். பல்கலைக்கழகங்கள், மருத்துவமனைகள் மற்றும் சமூக சேவை அமைப்புகளில் பெண்கள் உளவியல் நிபுணர்கள் ஆக பணியாற்றுகின்றனர். Prof. Nimalka Fernando என்பவர், இலங்கையின் முன்னணி சமூக ஆராய்ச்சியாளரும் மனித உரிமை செயற்பாட்டாளரும் ஆவார். சமூக உளவியல், மனித உரிமைகள் மற்றும் சமூக மாற்றம் தொடர்பான பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். குறிப்பாக சமூகத்தில் உள்ள மன அழுத்தங்கள், வன்முறை மற்றும் மனித உரிமை மீறல்கள் என்பன மனிதர்களின் மனநிலையை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை பற்றி ஆய்வு செய்து, சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளார்.

Prof. Santani De Silva இலங்கையின் மனநல மற்றும் உளவியல் ஆலோசனைத் துறையில் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளார். போரால் பாதிக்கப்பட்டவர்கள், மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கு பல்வேறு உளவியல் ஆலோசனைகளை வழங்கியுள்ளார். அத்தோடு Post Traumatic Stress Disorder எனப்படும் பேரழிவுக்கு பிந்தைய மன அழுத்தத்தைப் பற்றி ஆய்வு செய்து உளவியல் துறையில் பெரும் பங்காற்றி உள்ளார்.



குழந்தைகள் மற்றும் குடும்ப உளவியல் துறையில் பணியாற்றிய Dr. Sumithra Fernando குழந்தைகளின் வளர்ச்சி, குடும்ப உறவுகள் மற்றும் கல்விச்சூழல் என்பன அவர்களின் மனநிலையை பாதிப்படைய செய்யும் முறை குறித்து ஆய்வுகளை மேற்கொண்டார். இவ்வாறு இலங்கையில் பல பெண்கள் உளவியல் ஆலோசகர்களாக மருத்துவமனையிலும், சமூகச்சேவை அமைப்புகளிலும் பணியாற்றுகின்றனர். குறிப்பாக உளவியல் ஆலோசனை நிலையங்கள், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்கு மனநல வழிகாட்டல்களை வழங்கி வருகின்றனர். எனவே, உளவியல் துறையில் பெண்களின் பங்களிப்பு உலகளவில் மட்டுமல்லாமல் இலங்கையிலும் மிக முக்கியமானதாக காணப்படுகிறது. அவர்களின் பங்களிப்பு மனிதனின் மனதை புரிந்து கொள்ளவும் சமூகத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தவும் பெரிதும் உதவுகின்றது. எனவே, உளவியல் துறையின் வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு மிகவும் மதிப்பிற்குரியதாகும்.


உசாத்துணை நூல்கள்

□நவீன உளவியலின் வரலாறு

□உளவியல் வரலாற்றுக்கு அறிமுகம்

□குழந்தைகளின் மன ஆய்வு




நேற்றைய வேர்களில் முளைத்த நாம்
நாளைய கிளைகளாய் விரிகிறோம்...
மாற்றங்கள் மட்டும் மாறாத உலகில்
சமுதாயச் சக்கரம் சுழல்கிறது!
தொழில்நுட்பத் திரைக்குப் பின்னால்
ஆயிரம் கைகள் அணைக்கக் காத்திருக்க
அலைபேசித் திரையில் உறவு தேடுகிறோம்.
இயந்திரங்கள் பேசும் மொழியறிந்து - நாம்
மனிதத்தின் மௌனம் தொலைக்கலாமோ?
இயற்கை எனும் அன்னை
கான்கிரீட் காடுகள் வளர்ந்தாலும்
பசுமை இன்றி உயிர் வாழுமோ?
நாளைய தலைமுறை சுவாசிக்க நாம்
இன்றே ஒரு விதை நடுவோம்!
கல்வியும் அறிவும்
ஏட்டுக் கல்வி மட்டும் போதாது
ஈரமுள்ள நெஞ்சமும் வேண்டும்...
சாதி, மதக் கோடுகளைத் தாண்டி
சமத்துவக் காற்றைச் சுவாசிப்போம்!
நம்பிக்கைப் பயணம்
புதுமை கண்டு மிரளாமல்
புத்தி கூர்மையால் வென்றிடுவோம்...
அறிவியல் கைகளில் அறம் இருந்தால்
எதிர்காலம் நம் வசப்படும்!







குழந்தைப் பேச்சில் கவிதை உண்டு
குறும்புச் சிரிப்பில் அமுதம் உண்டு
மழலை மாறாச் சிறுவர் கூட்டம்
மண்ணின் மடியில்தெய்வத் தோற்றம்

புத்தகம் ஏந்தும் கைகளில் இன்று
செங்கற்கள் ஏனோ பாரமாய்?
பள்ளி செல்லும் பாதையில் எதற்கு
பயங்கள் சூழக்காரிருள்

கல்வி என்பது அவர்களின் கண்கள்
அதைக் கானல் நீராக்கல் பெரும் பாவம்!
சத்துணவு என்பது அவர்களின்
உரிமை அதை
வறுமைத் தீயினில் கருக்கல் பாவம்

பாதுகாப்பு என்பது அவர்களின் கவசம்
அதைப் பாதகர் உடைத்தல் பெரும்
துரோகம்
சிட்டுக்குருவிகள் சிதைக்கப்படாமல்
வண்ணத்துப்பூச்சிகள் வாடாமல்
அன்பெனும் கூட்டில்
அரவணைப்போம் அவர்
அச்சம் போக வழிநடப்போம்

சிறுவர் உழைப்பைச் சினந்து ஒழிப்போம்
சிறுவர் வன்முறை தடுத்து நிறுத்துவோம்
நாளை உலகம் செழிக்க இன்று
பிஞ்சு மொட்டுகளைக் காப்போம்





# சாதனைச்சிறகுகள்

ப.ரஜீகன்
கணிதப்பிரிவு

பெண்மை என்பது மென்மையின் அடையாளம் மட்டுமல்ல, அது அளப்பரிய வலிமையின் உருவம். ஒரு காலத்தில் வீட்டில் முடக்கபப்ட்டிருந்த பெண்களின் குரல்கள் இன்று விண்வெளி முதல் விளையாட்டு மைதானங்கள் வரை ஓங்கி ஒலிக்கின்றன. சர்வதேச மகளிர் தினம் என்பது வெறும் கொண்டாட்டம் அல்ல பெண்களின் உரிமைகளையும், அவர்கள் கடந்து வந்த போராட்டப் பாதையையும் நினைவுகூரும் ஒரு வரலாற்றுத் தடம்.

இன்றைய நவீன உலகில் பெண்கள் எட்டாத சிகரங்களே இல்லை எனக்கூற முடியும். குடும்பம், வேலை என இரண்டையும் சமநிலையில் கையாளும் மேலாண்மைத்திறன் பெண்களுக்கு இயல்பாகவே கைவந்தகலை. பொருளாதாரரீதியாகவும், சமூகரீதியாகவும் பெண்கள் முன்னேறும்போது ஒரு நாடே முன்னேறுகிறது. "பெண்ணடிமை தீரும் வரை இத்திருநாட்டில் வேறெந்த விடுதலைதான் கூடும்" என்ற பாரதியின் வரிகள் இன்றும் நம் சிந்தனைக்கு உரம் சேர்க்கின்றன.

இருப்பினும், சம ஊதியம், கல்வி வாய்ப்பு மற்றும் பாதுகாப்பு சார்ந்த சவால்கள் இன்றும் முழுமையாகத் தீரவில்லை. சமுதாயம் என்பது பறவையின் இரண்டு இறக்கைகளைப் போன்றது. ஆணும் பெண்ணும் சமமாக இயங்கினால் மட்டுமே அந்தப் பறவை உயர பறக்க முடியும். பெண்களின் கனவுகளுக்குத் தடையாக இல்லாமல் அவர்களுக்கு ஊக்கமளிக்கும் சூழலை உருவாக்குவதே இந்த நாளின் உண்மையான வெற்றியாகும்.

## பெண்மை பற்றி மேதைகளின் கருத்துகள்

### மகாகவி பாரதியார்

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்."

### மகாத்மா காந்தி

பெண் என்பவள் மென்மையானவள் அல்ல , அவள் வலிமையானவள். அகிம்சைப் போராட்டத்தில் ஆண்களை விடப் பெண்களே சிறநத் வீரர்கள்."

### நேரு

ஒரு ஆணுக்குக் கல்வி அளித்தால் ஒரு நபரிற்குக் கல்வி கிடைக்கும் ஒரு பெண்ணுக்குக் கல்வி அளித்தால் முழு குடும்பத்திற்கே கல்வி கிடைக்கிறது."

### நெப்போலியன்

எனக்குச் சிறந்த தாய்மார்களைத் தாருங்கள், நான் உங்களுக்குச் சிறந்த தேசத்தைத் தருகிறேன்

# இவ்வருட மகளிர் தினம்

## வெறும் கொண்டாட்டமல்ல

## மாற்றத்திற்கான ஒரு தொடக்கம்



E.A. மோஷாக்
கணிதப்பிரிவு

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 வந்துவிட்டால், சமூக வலைதளங்கள் முழுவதும் மகளிர் தின வாழ்த்துகள், ஊதா நிறப் படங்கள், அழகான மேற்கோள்கள் ஆகியவை நிறைந்து விடுகின்றன. அவை மகிழ்ச்சியை தருகின்றன தான். ஆனால் ஒரு கேள்வி எனக்குள் எழுகின்றது.மகளிர் தினம் இதற்காக மட்டும்தானா?

2026 ஆம் ஆண்டின் சர்வதேச மகளிர் தினம் எனது கேள்விக்கு ஒரு புதிய விடை-யைத் தருகிறது. இந்த ஆண்டு, இது வெறும் ஒரு கொண்டாட்ட நாளாக இல்லாமல், உண்மையான மாற்றத்திற்கான ஒரு அழைப்பாக மாறியுள்ளது. இந்த ஆண்டின் முக்கிய கருப்பொருள்களான ஐ.நா. சபையின் "உரிமைகள். நீதி. செயல்." (Rights. Justice. Action.) மற்றும் சர்வதேச மகளிர் தின அமைப்பின் "கொடுத்து உயர்வோம்" (Give to Gain) என்ற கருத்துகள், இன்று பெண்கள் எதிர்கொள்ளும் உண்மையான நிலையை வெளிப்படுத்துகின்றன.

நாம் நேர்மையாகச் சொன்னால், 2026 இல் பெண்கள் பல துறைகளில் பெரிய முன்னேற்றம் அடைந்துள்ளனர். அரசியல், கல்வி, விஞ்ஞானம், விளையாட்டு, வணிகம், விண்வெளி என எங்கு பார்த்தாலும் பெண்களின் திறமை பிரகாசிக்கின்றது. அது நமக்கு ஒருவித பெருமையையும் தருகிறது. ஆனால் இன்னொரு கசப்பான உண்மையும் உள்ளது.

இன்றும் உலகளவில் பெண்களுக்கு கிடைக்கும் சட்டப்பூர்வ உரிமைகள், ஆண்களுக்கு உள்ள உரிமைகளின் சுமார் 64% மட்டுமே. சம வேலைக்கு சம ஊதியம் கிடைக்காத நிலை இன்னும் பல இடங்களில் உள்ளது. வீட்டு வேலைகளின் பெரும் பொறுப்பு பெரும்பாலும் பெண்களின் தோள்களில் மட்டும் தான் இன்றும் உள்ளது. கல்வி வாய்ப்புகளிலும் இன்னும் சில இடைவெளிகள் இருக்கின்றன என்பதை மறுக்க இயலவில்லை. இதிலிருந்து ஒரு முக்கியமான உண்மை நமக்குப் புரிகிறது: சட்டங்கள் இருந்தால் மட்டும் போதாது அவை வாழ்க்கையின் நடைமுறையாக அமைய வேண்டும்.

இந்த ஆண்டின் தொனிப்பொருளான "Give to Gain – கொடுத்து உயர்வோம்" என்பதும் இதையே எடுத்துரைக்கின்றது.இது வெறும் உதவி செய்வது பற்றியது அல்ல. இது ஒருவரை ஒருவர் உயர்த்திக் கொள்ளும் மனப்பான்மை பற்றியது. ஒரு பெண் தனது அனுபவத்தை மற்றொரு பெண்ணுடன் பகிர்ந்து கொண்டால்,ஒரு ஆசிரியர் தனது மாணவியைக் கனவு காணத் தூண்டினால், ஒரு நிறுவனம் தனது பெண் ஊழியர்களுக்கு பாதுகாப்பான சூழலை வழங்கினால், ஒரு குடும்பம் தனது மகளின் கனவுகளை மதித்தால் ஒரு கணவன் தனது மனைவியின் கனவுகளை நிறைவேற்ற முயற்சித்தால் அங்கே வளர்ச்சி ஒருவருக்கே மட்டும் கிடைக்காது அது சமூகம் முழுவதையும் உயர்த்தும்.



## தொடர்ச்சி..................

நாம் மற்றவர்களுக்குக் கொடுப்பதன் மூலம் எதையும் இழப்பதில்லை. மாறாக, நாம் ஒரு வலிமையான சமூகத்தை உருவாக்க உதவுகிறோம் இல்லையா? இந்த வருடம் ஏன் முக்கியமானது?

இன்றைய உலகம் பல சவால்களை எதிர்கொண்டு வருகிறது. சில இடங்களில் பெண்கள் முன்னேற்றம் அடைந்தாலும், இன்னும் சில இடங்களில் அவர்களின் அடிப்படை உரிமைகளுக்கே அச்சுறுத்தல்கள் இருக்கின்றன. நம் முன்னோர்கள் போராடி பெற்ற உரி-மைகளை பாதுகாக்கவும், மேலும் முன்னேற்றவும் நாம் பொறுப்பு எடுக்க வேண்டும். அதனால் இந்த மகளிர் தினம் வெறும் "Happy Women's Day" என்று சொல்லி முடிக்கும் நாளாக இல்லாமல் இது ஒரு சிந்திக்கும் நாளாக,ஒரு உறுதிமொழி எடுக்கும் நாளாக, ஒருவரை ஒருவர் உயர்த்திக் கொள்ளத் தீர்மானிக்கும் நாளாக மாற வேண்டும். நம்மைச் சுற்றியுள்ள பெண்களுக்கு நாம் எப்படி ஆதரவாக இருக்க முடியும்? சமமற்ற நிை-லகளை நாம் எப்படி மாற்ற முடியும்?இந்தக் கேள்விகளை நம்மிடம் கேட்க வேண்டிய தருணம் இதுதான்.

2026 ஆம் ஆண்டின் மகளிர் தினம் நமக்குச் சொல்லும் ஒரு எளிய ஆனால் வலிமையான செய்தி:

"பெண்கள் முன்னேறினால், உலகமே முன்னேறும்."

இது பெண்களுக்கான போராட்டம் மட்டும் அல்ல.இது சிறந்த நியாயமான, மனிதநேயமான உலகை உருவாக்கும் ஒரு பயணம்.

E.A. மோஷாக்
கணிதப்பிரிவு



R.Kabilashini
Maths



V.Leethiya
Home Economics



# இரு துருவங்கள்

படைப்பின் விதியில் பிரிவுகள் இல்லை
அனைவரின் பார்வையிலும் தவறுகள் இல்லை
அறிவின் தேடல் ஆணுக்கு மட்டுமா?
அன்பின் அரவணைப்பு பெண்ணுக்கு மட்டுமே

தராசின் தட்டுக்கள் இரண்டு - அவை
சமமாய் இருந்தால் தான் தர்மம்
ஆணும் பெண்ணும் இணைந்தால் தான் - இந்த
தரணியில் தரம்

சமையலும் கரண்டியும் என்று என்னவளுக்கு
வேலி இட்டது போதும்
வெளி உலகச் சாதனைகள் ஆண்களுக்கு
என கூறிய பாமரர்கள் சொன்னதும் போதும்

அறிவில் என்னவள் குறைந்தவளும் அல்ல
அன்பில் என்னவள் சளைத்தவளும் அல்ல
நேசமும் வீரமும் இருவருக்கும் பொதுவே
இதில் இன்னும் ஏனோ பாகுபாடு?

சமமான கல்வி, சமமான ஊதியம்,
சமமான வாய்ப்பு, சரிநிகர் மரியாதை
இதுவே நாளைய நமக்கான பாதை
இங்கு பேதங்கள் பேசுவது ஏனோ?

ஒரு சிறகில் பறவை பறப்பதில்லை
அது போல
ஒரு பாலினத்தால் உலகம் நகர்வதில்லை
கை கோர்த்து நடப்போம் சமத்துவ பாதையில்
புது உலகம் படைப்போம் சரிபாதி துருவமாய்

S. தர்சிகா
இரண்டாம் தேசிய மொழி தமிழ்





R. பிரியதர்சினி
ஆரம்பக்கல்வி

# கல்வியும் அதன் சமத்துவமும்

சமூக சமத்துவமும் ஏழை- பணக்காரர் பாகுபாடும் சமூக சமத்துவம் என்பது சமூகத்தில் வாழும் ஒவ்வொருவரும் சம உரிமைகள், சம வாய்ப்புகள் மற்றும் சம மரியாதையைப் பெறுதல் ஆகும். மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள் என்ற எண்ணமே இதன் அடிப்படை ஆகும். ஆனால் நிஜ வாழ்வில் ஏழை பணக்காரர் பாகுபாடு சமூக அமைப்பை பெரிதும் பாதிக்கிறது. பொருளா-தார வளங்கள் சிலரிடம் மட்டுமே குவிந்து, காணப்படுகின்றது.பலர் அடிப்படை தேவைகளுக்கே போராடும் நிலை தற்கால சமூகத்தில் காணப்படுகின்றது.

ஏழை குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு தரமான கல்வி, நல்ல சுகாதாரம், பாதுகாப்பான வாழ்க்கை சூழல் ஆகியவை குறைவாகவே கிடைக்கின்றன. இதனால் அவர்கள் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை அதிகம் இழக்கின்றனர். அதே சமயம், பணக்காரர்கள் உயர்ந்த கல்வி, சிறந்த வேலைவாய்ப்பு, சமூக செல்வாக்கு போன்ற பல நன்மைகளை அனுபவிக்கின்றனர் இந்த வேறுபாடு சமூகத்தில் அநீதியையும் மனஅழுத்தத்தையும் உருவாக்குகிறது.

ஏழை பணக்காரர் இடைவெளி அதிகரிக்கும்போது சமூக ஒற்றுமை பாதிக்கப்படுகிறது. இதனால் குற்றச்செயல்கள், எதிர்ப்பு மனப்பான்மை, சமூக மோதல்கள் போன்றவை தோன்றுகின்றன. ஆகையால் அரசு சமநிலை பொருளாதார கொள்கைகள், இலவச கல்வி மற்றும் நலத்திட்டங்களை வலுப்படுத்த வேண்டும். சமூக அமை-ப்புகளும் தனிநபர்களும் உதவி மனப்பா-ன்மையுடன் செயல்பட வேண்டும்.

நாம் அனைவரும சமத்துவ சிந்தனையை வளர்த்தால் மட்டுமே உண்மையான சமூக முன்னேற்றம் ஏற்படும். சமத்துவமும் மனி-தநேயமும் நிறைந்த சமூகமே நிலையான வளர்ச்சிக்கான அடித்தளமாகும்.ஒவ்வொ-வாருவரும் பிறரை மதித்து, உதவி மனப்பா-ன்மையுடன் நடந்துகொண்டால் ஏழை□பணக்காரர் இடைவெளியை குறைக்க முடியும். சமத்துவமான சமூகமே நீடித்த அமைதியும் முன்னேற்றமும் கொண்ட சமூகமாகும்.



# தொழில்நுட்ப வளர்ச்சி

## சமூக வாழ்வியல் தாக்கங்கள்

FATHIMA FAZRINA
2NL TAMIL

மாற்றம் ஒன்றுதான் மாறாதது சமூகத்தை எடுத்துக் கொண்டால் ஆரம்ப கால சமூகமானது இயற்கையோடு ஒத்து இருந்தது ஆனால் இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியினால் சமூகமானது இயற்கையில் இருந்து விலகி தொழில்நுட்பம் சார்ந்ததாகவே காணப்படுகிறது

காலையில் விழித்து பல் துலக்கி முகம் கழுவிய அன்றைய சமூகமானது இன்று காலையில் கண்விழித்தது முதல் உறங்கச் செல்லும் வரை மனிதனின் ஒவ்வொரு அசைவும் ஏதோ ஒரு வகையில் தொழில்நுட்பத்தோடு தொடர்புபட்டு கொண்டே காணப்படுகின்றது அந்த அளவுக்கு இன்று சமூகத்தில் தொழில்நுட்பம் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ் வளர்ச்சியானது மனித சமூகத்திற்கு பெரும் வசதிகளை வழங்கி இருந்தாலும் கூட சமூக வாழ்வியலை நோக்கும் போது பாரிய முரண்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தகவல் தொடர்பாடல் உறவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை பார்த்தால் முன்னைய காலத்தில் கடிதங்கள் சந்திப்புகள் மூலம் தான் உரையாடல்கள் நிகழ்ந்தன ஆனால் இன்று அதன் எல்லையை தாண்டி சமூக ஊடகங்களுடாக எந்த நேரமும் யாரையும் தொலைவில் உள்ளோர்களையும் நினைத்த மாத்திரத்திலேயே தொடர்பு கொள்ளும் வகையில் இன்று தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது. இவ்வாறான தொழில்நுட்ப வளர்ச்சியால் உலகெங்கிலும் சிதறி காணப்படுகின்ற உறவினர்கள் நண்பர்கள் மற்றும் வியாபார வர்த்தகர்கள் போன்றோரை நொடிப் பொழுதில் அருகில் இருப்போரிடம் பேசாமல் தொலைபேசியில் இருப்பவர்களுடன் பேசும்" விதத்திற்கு இந்த துறையானது வளர்ந்துள்ளதால் உறவினர்களிடையே மெய்நிகர் இடைவெளி ஏற்பட்டுள்ளது.

கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள மாற்றம் என்று பார்க்கையில் கல்வியில் தொழில் நுட்பமானது பாரிய புரட்சியை ஏற்படுத்தி உள்ளது அதாவது குருகுலக் கல்வியில் தொடங்கி கரும்பலகையில் ஆரம்பித்த கல்வி முறையானது இன்று கணினி திரை மற்றும் ஸ்மார்ட் போர்ட் அளவிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி கல்வி தகவல்களைத் தேடி அறிய **chatgbt ,Gemini** போன்ற **AI** உருவாக்கத்தால் புத்தக வாசிப்பு முறையானது முற்றாக மறைந்து இணையவலி ஊடாக கல்வி தேடல்கள் சேகரிக்கும் முறையானது உருவாகியுள்ளது இதனால் மாணவர்மையக் கல்வியும் உருவாகியுள்ளது எனவே மாணவர்களின் தேடல்கள் அதிகரித்து உள்ளது ஆனால் புத்தகங்களின் ஊடாகப் வாசித்து பெறக்கூடிய சிந்தனை ஆற்றல் குறைவடைந்துள்ளது.

கல்வியில் மட்டுமல்லாது தொழில்துறை எடுத்துக் கொண்டால் மனிதன் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இன்று அதிகமான தொழில்களை மேற்கொள்கின்றான் இதனால் பார்வை குறைபாடு அதேபோல உடல் உழைப்பு குறைவு பருமன் அதிகரிப்பு, மன அழுத்தம் போன்ற சீரற்ற நிலைகளுக்கும் நோய்களுக்கும் உட்பட்டு வருவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

நவீன தொழில்நுட்ப வளர்ச்சியினால் உருவாக்கப்பட்டுள்ள தொலைத் தொடர்பு முறைகள் ஊடகத்துறைகளில் ஏற்பட்டுள்ள இவ்வாறான முன்னேற்றங்களினால் ஒருவரின் தனிப்பட்ட தகவல்கள் அனைத்தும் இரகசியமாக சேகரிக்கப்படுகிறது. எனவே இது சமூகத்தில் பாதுகாப்பு புதிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது மற்றும் இணையவழி மோசடிகள் (ஊலடிநச உசஅைந ∴ ர்யஉமைபெ) என்பனவும் இன்று அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு மனிதன் இன்று சமூக தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தன்னையும் தனது சமயம் விழுமியங்கள் கலாச்சாரங்களையும் மாற்றிக்கொண்டு வருவதால் பல்வேறுபட்ட கலாசார பண்பாட்டு மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் காணப்பட்ட சமூக தொடர்புகள் குறைந்து இன்று தனிநபர் தன் சுயநலத்திற்காக செயல்படும் ஒரு சமூகமாக இன்றைய சமூகம் மாறி உள்ளது.

எனவே தொழில்நுட்பம் என்பது ஒரு கூர்மையான கத்தி போன்றது சமூகத்தில் நாம் அவற்றை பயன்படுத்தி வாழ்வது என்பது அக்கூரிய கத்தியின் முனையில் நடப்பது போன்றதாகும். அந்த வகையில் தொழில்நுட்பம் மனிதனை ஆளக்கூடாது மனிதன் தான் தொழில்நுட்பத்தை ஆள வேண்டும் எனவே அதன் தீமைகளை நன்கு ஆராய்ந்து அறிந்து அவற்றினூடாக பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மை தரத்தக்க விடயங்களை மாத்திரம் பெற்றுக் கொள்வதோடு இத்தொழில் நுட்பத்தினுடைய தீவிர வளர்ச்சியானது சமூகத்தை மேம்படுத்த வேண்டுமே தவிர மனித வாழ்வியலை அழிக்காது இருக்க செய்தல் வேண்டும்.






இருக்கை உண்டு... இதயம் எங்கே
கையில் உலகம் இருந்தும் - நம்
கண்ணில் மனித நேயம் எங்கே?
விரல் நுனியில் தகவல் இருந்தும் - நம்
புத்தியில் தெளிவு எங்கே?
அறிவும் அழிந்ததடா..
கண்டறி முறையும் கானலானதடா..
சிந்தனையும் சிமார்ட்போனால்
சிறையிடப்பட்டதடா...
ஆயிரம் முகநூல் நண்பர்கள் இருந்தும்
ஆறுதல் சொல்ல அருகிலோர் ஆளில்லை!
திரையோடு பேசும் கலை கற்றோம் - சக
மனிதன் முகம் பார்க்க மறந்து நின்றோம்!
பட்டம் வாங்கும் பந்தயத்தில் - இங்கே
பண்புகள் கசந்து போனதென்ன?
அறிவை வளர்க்கும் கல்வி முறை - ஏன்
அன்பை விதைக்கத் தவறியதோ?
ஆதிக்கமும் ஆணவமும்
மனித நேயம் கொல்லும் ஆயுதம் எனும்
மெய் மறந்த மானிடமே...
நீ என்றோ மாறுவாயோ.. அன்றே
பூலோகம் மணக்கக் காணுவாய்..
மரத்தை பிடுங்கி காற்றை விற்று
Ac யில் துள்ளிகுதிக்கும் மனிதா..
பிளாஸ்டிக் பைகளில்
மூச்சுத் திணறுது நம் பூமி..
உன் உயிரை காக்க
ஒரு துளி நீரையேனும் நீ சேமி..



"ஓவியக்கவி"
HABSA
ஆரம்பக்கல்வி




வரப்பு மேட்டில் ஓடி விளையாடும்
வண்ணத்துப் பூச்சிகளின் சிறகுகளில்,
எழுத்துக்கள் இன்னும்
முழுமையாய் ஒட்டவில்லை!
கிழிந்த புத்தகப் பையில்
தொலைந்து போகும் பாடங்கள்,
வீட்டு வேலைகளுக்கு இடையே
விழிபிதுங்கும் கல்வி!
ஊர் தாண்டிப் போகும்
ஒற்றைப் பேருந்துக்காக - பல
மைல்கள் கடக்கும் சிறுவர்களின்
சோர்ந்த கால்கள்.
மழையில் ஒழுகும் கூரையும்
மின்சாரம் இல்லா இரவுகளும்,
கனவுகளின் வேகத்தை
மெல்லக் குறைக்கின்றன.
ஆசிரியரின் ஒற்றைப் பார்வையில்
அறிவியலைத் தேடும் கண்கள் இவை!
வறுமைக் கோட்டிற்கு அடியில்
வாழ்க்கை இருந்தாலும்,
வானத்தைத் தொடத் துடிக்கும்
வைராக்கிய நெஞ்சங்கள் இவை!
தொழில்நுட்பம் என்னும் சிறகு விரித்தால்,
இந்தக் கிராமத்துக் குருவிகளும்
சிகரம் தொடும் - ஒரு நாள்
நிச்சயம் சிகரம் தொடும்!
கல்வி என்பது வெறும் ஏட்டுச் சுரைக்காய் அல்ல
அது ஒரு கிராமத்தின் தலையெழுத்தையே
மாற்றும் வலிமை கொண்டது.

பி. தர்சிகா
ஆரம்பக்கல்வி





# ஆசிரியம்

அன்றவன் சிறுவன் தான்
இன்றொரு ஆசிரியன்
நின்றவன் பொறுப்புதனை
மனக் கண்ணில் ஓடவிட்டான்

பார் முழுதும் பலவிதமாய்
பல தொழில்கள் இருக்கயிலே
பூவுலகின் மாந்தரெல்லாம்
ஆசிரியம் போற்றுவதேன்!.

மூடியதோர் வகுப்பறையில்
முப்பது பேர் அமர்ந்திருக்க
முந்தியநாள் பயிற்சியையும்
முழு நேரப் புத்தகமும் என்று
மட்டும் இருப்பதுவா ஆசிரியம் என்பதுவே!

மனிதம் போற்றும் மாண்புகளும்
உரிமையோடு சமத்துவமும்
எடுத்தியம்பும் பெரும் பொறுப்பு.
என் கையில் உண்டல்லோ!!

சின்னஞ் சிறு கண்களுக்குள்
சிறகடிக்கும் கனவோடு
கண்முன்னே அமர்ந்திருக்கும்
சிறுகைகள்
அத்தனையும் எதிர்கால சமூகத்தின்
எழில் மிகு விழுதல்லோ!

அச் சிறு விழுது அந்தனையும்
பக்குவமாய் பாதுகாக்கும்
பெரும் பொறுப்பு எனக்குண்டு.
என் ஆசிரியப் பணிக்குண்டு.

ஒழுக்க நெறி உரைப்பதுவும்
சமூக நீதி பேணுவதும்
இடம் மாறும் மாணவனை
இயன்றளவு உயர்த்தி விட்டு
என் ஆசிரியம் உயிர்த்திடுமே!

ஓர் மருத்துவன் தான் தவறிழைத்தால்
ஓர் உயிர்தான் துளைவதுண்டு.
ஓர் ஆசிரியன் தவறிவிட்டால்
முழு தலை முறையே நிலை குலையும்.

M.H. Halika Jahas
ஆரம்பக்கல்வி





# மகளிர் தின விழிப்புணர்வு

## முதல்

## சமூக மாற்றம் வரை

எம்.ஆர்.எம்.ஸப்னாஸ்
விஞ்ஞானப்பிரிவு

பெண் என்பவள் ஒரு சமூகத்தின் அச்சாணி. "பெண்ணெனும் பேராற்றலைப் போற்றிடுவோம்" என்ற வரிகளுக்கேற்ப, உலகம் முழுவதும் மார்ச் 8ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. இது வெறும் கொண்டாட்டத்திற்கான நாள் மட்டுமல்ல பெண்களின் உரிமைகள் , பாதுகாப்பு மற்றும் அவர்கள் சமூகத்திற்கு வழங்கும் அளப்பெரிய பங்களிப்பை அங்கீகரிப்பதற்கான ஒரு வரலாற்றுத் தருணமாகும்.

## சமூக விழிப்புணர்வும் இன்றைய சவால்களும்

1975 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் இந்த நாள் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது. இருப்பினும், நவீன உலகிலும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறைந்தபாடில்லை.

### வன்முறைகள்

சிறுமிகள் முதல் முதியவர்கள் வரை உடல் மற்றும் மனரீதியான அச்சுறுத்தல்களைச் சந்திக்கின்றனர்.

### மறைமுகச் சுரண்டல்

கல்வியறிவு பெருகிய இடங்களிலும் கூட, அதிகார துஸ்பிரயோகம் மற்றும் ஊதியப் பாகுபாடு போன்ற சுரண்டல்கள் தொடர்கின்றன.

### சமூகப் பார்வை

பெண் முன்னேற்றம் என்பது பொருளாதார வளர்ச்சியில் மட்டும் சுருங்கிவிடாமல், அவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் கண்ணியமான வாழ்விடத்தை உறுதி செய்வதிலும் இருக்க வேண்டும்.

## வரலாற்று மற்றும் ஆன்மீகப் பின்புலம்

பெண்களின் உரிமைகள் பற்றி பேசும் போது, வரலாற்றின் "ஜாஹிலிய்யா" (அறியாமைக் காலம்) மிக முக்கியமானது. அக்காலத்தில் பெண்கள் போகப் பொருட்களாகவும், பெண் சிசுக்கள் சுமையாகவும் கருதப்பட்டனர்.



### மாற்றம்

இஸ்லாமிய மார்க்கத்தின் வருகை பெண் சிசுக்கொலைக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

### உரிமைகள்

சொத்துரிமை, திருமண உரிமை மற்றும் கல்வி கற்கும் உரிமை ஆகியவற்றை பெண்களுக்கு வழங்கியது.

### அடிப்படை

உண்மையான சமூக மாற்றம் என்பது கல்வியோடு சேர்த்து, “தக்வா” (இறை அச்சம்) மற்றும் ஒழுக்க விழுமியங்களை ஆண்-பெண் இருவரிடமும் வளர்ப்பதில்தான் உள்ளது.

## இயல்புநிலை மாற்றமும் சமத்துவமும்

சமத்துவம் என்பது பெண்களை ஆண்களாக மாற்றுவதல்ல மாறாக அவர்களின் இயல்புநிலை மற்றும் மென்மைத் தன்மையை மதித்து, அவர்களுக்குரிய வாய்ப்புகளை வழங்குவதாகும். அடுப்படிச் சாம்பலில் முடங்கிக்கிடந்த பெண்கள் இன்று “ஆகாய வீதியில் சிறகடிக்கும்” நிலைக்கு உயர்ந்துள்ளனர். ஆனாலும், அவர்களின் உயிரியல் மற்றும் பாதுகாப்புத் தேவைகளை உறுதி செய்வது சமூகத்தின் கடமையாகும்.


## பெண்ணியத்தைப் போற்றுதல்

பெண் என்பவள் அன்பின் ஊற்று அறிவின் தீபம். சேயாய், தாயாய், சகோதரியாய் உலகை இயக்கும் உயிர்மூச்சாக அவள் விளங்குகிறாள். “ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை” என்ற பாரதியின் கூற்றிற்கு இணங்க, தடைகள் பல தாண்டி சிகரம் தொடும் பெண்களின் ஆற்றல் போற்றத்தக்கது.

## முடிவுரை

மகளிர் தின விழிப்புணர்வு என்பது ஒரு நாள் நிகழ்வோடு முடிந்துவிடக் கூடாது. பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்கவும் நாம் உறுதி ஏற்க வேண்டும். அறிவாலும், பண்பாலும் ஆளுகின்ற பெண்ணினத்தைப் போற்றுவதன்

# பெண்மை




**M.K .Imthinan Kathafi**
**Agriculture Science**



# பூமித்தாயின் கவசம்

விஞ்ஞானத்தின் விந்தை என்றோம் - இன்று
மெய்ஞானம் இழந்த வினையானோம்!
கையடக்கப் பைகளில் உலகைச் சுருட்டி
கல்லறை நோக்கி நடைபோடுகின்றோம்.

மண்ணின் கண்ணீர்
ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் - இது
அப்படியே இருக்கும் வஞ்சகம்!
மண்ணின் சுவாசப் பைகளை அடைத்து
மழைநீரைத் தடுக்கும் கவசமானது.

கடலின் கதறல்
மீன்களின் வயிற்றில் பிளாஸ்டிக் துண்டுகள்
மீனவன் வலையில் கழிவு மூட்டைகள்!
நீலக் கடலும் நீரிழந்து போனது - நம்
நீண்ட காலப் பேராசையினால்.

சமூகப் பிணி
சுற்றமெங்கும் குப்பைக் காடுகள்
சுவாசம் எங்கும் நச்சுப் புகைகள்!
நாளைய தலைமுறை வாழும் பூமியை
நாசமாக்கி நின்றோம் நாம் இன்று.

தீர்வு நம் கையில்
துணிப்பை ஏந்துதல் அவமானம் அல்ல - அது
பூமித்தாயைக் காக்கும் கவசம்!
மட்கும் பொருளை நேசிப்போம் - இந்த
மட்காத அரக்கனை ஒழிப்போம்!


**ஜெ.கஜேந்தினி**
ஆரம்பக்கல்வி


# மகளிர் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட கண்காட்சி
## 06-03-2026





















பா.சுரேகா
கணிதப்பிரிவு

# சமூகத்தை கட்டியெழுப்புவதில் குடும்பத்தின் பங்கு

குடும்பம் என்பது சமூகத்தின் மிகச் சிறியதும் அடிப்படையானதுமான அலகாகும். ஒரு குழந்தை முதன்முதலில் ஒழுக்கங்கள், பண்பாடுகள் மற்றும் நடத்தைகள் ஆகியவற்றை கற்றுக்கொள்வது குடும்பத்திலேயே ஆகும். ஒரு சமூகத்தின் உயர்வு அதன் குடும்பங்களின் ஒற்றுமையை பொறுத்தே அமைகிறது. நல்ல வழிகாட்டுதலுடன் கூடிய குடும்பச் சூழல், சமூகத்திற்கு பயனுள்ள பொறுப்பான குடிமக்களை உருவாக்கும்.

குடும்பத்தின் முக்கியமான பங்குகளில் ஒன்று சமூகமயமாக்கல் ஆகும். குழந்தை பருவத்திலிருந்து பெற்றோரும் மூத்தவர்களும் குழந்தைகளுக்கு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், மற்றவர்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டும் என்பதைக் கற்பிக்கிறார்கள். மரியாதை, அன்பு, நேர்மை, ஒழுக்கம் போன்ற அடிப்படை பண்புகள் முதலில் வீட்டிலேயே கற்றுக்கொள்ளப்படுகின்றன. இவ்வாறான பண்புகள் குழந்தையின் ஆளுமையை வடிவமைத்து, சமூகத்தில் அவர் எவ்வாறு செயல்படுவார் என்பதை நிர்ணயிக்கின்றன. மேலும் குடும்பம் உணர்ச்சி, ஆதரவு மற்றும் பாதுகாப்பு என்பவற்றை வழங்கும் இடமாகும். அன்பும் அக்கறையும் நிறைந்த குடும்ப சூழல், குழந்தைகளின் தன்னம்பிக்கையும் மன உறுதியும் வளரச் செய்கிறது. குடும்பத்தின் ஆதரவை உணரும் ஒருவர் வாழ்க்கைச் சவால்களை தைரியமாக எதிர்கொண்டு சமூகத்திற்கு பயனுள்ள பங்களிப்புகளைச் செய்ய முடியும்.

குடும்பம் கல்வி வளர்ச்சிக்கும் முக்கிய பங்காற்றுகிறது.பாடசாலைகள் முறையான கல்வியை வழங்கினாலும், கல்வியைப் பற்றிய மனப்பாங்கு, பொறுப்பு உணர்வு, கடின உழைப்பின் மதிப்பு ஆகியவற்றை உருவாக்குவதில் குடும்பம் முக்கிய பங்கு வகிக்கிறது. குழந்தைகளில் வாசிப்பு பழக்கம், ஆர்வம் மற்றும் நல்ல ஒழுக்கத்தை ஊக்குவிக்கும் பெற்றோர் எதிர்காலத்தில் அறிவும் ஒழுக்கமும் கொண்ட தலைவர்களை உருவாக்குகின்றனர்.

மேலும் குடும்பமானது பண்பாட்டு மற்றும் விழுமிய நெறிமுறைகளை பாதுகாக்கும் பொறுப்பையும் வளர்க்கிறது. மரபுகள், மத நம்பிக்கைகள், மொழி மற்றும் பழக்கவழக்கங்கள் ஆகியவை ஒரு தலைமுறையிலிருந்து இன்னுமொரு தலைமுறைக்கு குடும்பத்தின் மூலம் பரிமாறப்படுகின்றன. இதன் மூலம் சமூகத்தின் அடையாளமும் ஒற்றுமையும் பாதுகாக்கப்படுகின்றன.குடும்பங்கள் சமூக நிலைத்தன்மைக்கும் பங்களிக்கின்றன. நல்ல முறையில் செயல்படும் குடும்பங்கள் குற்றம், வன்முறை மற்றும் அலட்சியம் போன்ற சமூகப் பிரச்சினைகளை குறைக்கின்றது. வலுவான குடும்பங்கள் சட்டத்தை மதிக்கும், பொது நலத்துடன் சிந்திக்கும் மற்றும் சமூக முன்னேற்றத்தில் ஈடுபடும் நபர்களை ஊக்குவிக்கும்.

இன்றைய நவீன உலகில் பொருளாதார அழுத்தம், தொழில்நுட்ப தாக்கம் மற்றும் வாழ்க்கை முறை மாற்றங்கள் போன்ற சவால்களை பல குடும்பங்கள் எதிர்கொள்கின்றன. இருப்பினும் குடும்பத்தின் அடிப்படை பங்கு மாறாமல் உள்ளது. பெற்றோரும் பாதுகாவலர்களும் குழந்தைகளை அன்பு, ஒழுக்கம் மற்றும் நல்ல முன்னுதாரணங்களின் மூலம் வழிநடத்த வேண்டும்.

மாணவர் ஆசிரியர்களாகிய நாம், கல்வி வகுப்பறைகளில் மட்டுமல்ல் அது வீட்டிலேயே ஆரம்பமாகிறது என்பதை உணர்கிறோம். குடும்பமும் பாடசாலையும் இணைந்து செயல்படும் போது பொறுப்பான பிரஜைகளை உருவாக்கி முன்னேற்றம் மிக்க சமூகத்தையும் உருவாக்க முடியும். நல்ல பண்புகளை வளர்த்தல், சட்டங்களை மதித்தல் மற்றும் எதிர்கால தலைமுறையை வழிநடத்தல் ஆகியவற்றின் மூலம் குடும்பங்கள் சமூக ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் வலுவான அடித்தளத்தை அமைக்கின்றன.- எனவே, வலுவான குடும்பங்களை உருவாக்குவதன் மூலம் மட்டுமே ஒரு நல்ல மற்றும் முன்னேற்றம் மிக்க சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்.




செ.தர்மரோஜினி
ஆரம்பக்கல்வி

ஒரு நாட்டின் உண்மையான சொத்து அதன் இயற்கை வளங்களோ அல்லது பொருளாதார வளர்ச்சியோ மட்டுமல்ல அந்த நாட்டின் இளைஞர் சக்தியே ஆகும். "நாளை நமதே" என்று முழங்கும் இளைஞர்கள் , சமூகத்தின் அச்சாணியாகத் திகழ்கின்றனர். மாற்றத்தை விரும்புவதும், அந்த மாற்றத்திற்காகப் போராடுவதும் இளைஞர்களின் இயல்பான பண்பாகும். ஒரு சமுதாயம் எழுச்சி பெறுவதும் வீழ்ச்சியடைவதும் அந்தச் சமூகத்தின் இளைஞர்கள் எவ்வாறு வழிநடத்தப்படுகிறார்கள் என்பதைப் பொறுத்தே அமைகிறது.

## மாற்றத்தின் முகவர்கள்

இளைஞர்கள் வெறும் எதிர்காலத் தலைவர்கள் மட்டுமல்ல, அவர்கள் இன்றைய மாற்றத்தின் முகவர்கள். பழைய மரபுகளில் இருக்கும் குறைகளைச் சுட்டிக்காட்டவும், புதிய சிந்தனைகளைத் துணிச்சலுடன் முன்வைக்கவும் இளைஞர்களால் மட்டுமே முடியும்.

அவர்கள் புதிய கருத்துக்கள், ஆற்றல் மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றின் ஊற்றுக்கண்ணாக விளங்குகின்றனர். சமூகத்தில் நிலவும் அநீதிகள், ஊழல் மற்றும் பாகுபாடுகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பதில் இளைஞர்கள் எப்போதும் முன்னணியில் நிற்கிறார்கள்.

## தொழில்நுட்பமும் சமூக மாற்றமும்

இன்றைய டிஜிட்டல் யுகத்தில், தொழில்நுட்பம் இளைஞர்களின் கைகளில் ஒரு வலிமையான ஆயுதமாக மாறியுள்ளது. சமூக வலைத்தளங்கள் மூலம் விழிப்புணர்வு பரப்புவதும், உலகளாவிய பிரச்சினைகளுக்கு ஆதரவு திரட்டுவதும் இளைஞர்களுக்கு எளிதாகியுள்ளது. காலநிலை மாற்றம், பாலினச் சமத்துவம் மற்றும் மனித உரிமைகள் போன்ற உலகளாவிய விவகாரங்களில் இளைஞர்களின் பங்களிப்பு இன்று தவிர்க்க முடியாததாக உள்ளது.

## இளைஞர்கள் சமூக மேம்பாட்டிற்குப் பங்களிக்க வேண்டிய சில முக்கிய வழிகள்:

☐ கல்வி மற்றும் விழிப்புணர்வு: பின்தங்கிய மக்களுக்குக் கல்வி கற்பித்தல் மற்றும் சமூகச் சீர்கேடுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
☐ தன்னார்வத் தொண்டு: இயற்கைச் சீற்றங்களின் போதும், சமூகத் தேவைகளின் போதும் முன்வந்து தன்னார்வப் பணிகளில் ஈடுபடுதல்.
☐ அரசியல் பங்களிப்பு: ஜனநாயக வழிமுறைகளில் பங்கேற்பதன் மூலம் கொள்கை மாற்றங்களை உருவாக்குதல்.

### சவால்களும் தீர்வுகளும்

இளைஞர் சக்தி சரியாகப் பயன்படுத்தப்படாவிட்டால், அது சமூகத்திற்குப் பெரும் இழப்பாக முடியும். வேலையின்மை, போதைப்பொருள் பழக்கம் மற்றும் தவறான வழிகாட்டுதல்கள் இளைஞர்களைத் திசைதிருப்பக்கூடும். இளைஞர்களுக்கு முறையான கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் தலைமைத்துவப் பயிற்சிகளை வழங்குவது அரசாங்கத்தினதும் சமூகத்தினதும் கடமையாகும். தாழ்வு மனப்பான்மையைத் தவிர்த்து, சமூக அக்கறையுடன் செயல்படும் இளைஞர்களால் மட்டுமே ஒரு வலிமையான தேசத்தை உருவாக்க முடியும்.

### முடிவுரை

“இளைஞர்களே விழித்தெழுங்கள்” என்ற விவேகானந்தரின் வாக்குக்கேற்ப, இளைஞர்கள் தங்கள் சக்தியை உணர்ந்து செயல்பட வேண்டும். சமூக மாற்றத்தின் விதைகளை விதைப்பவர்கள் இளைஞர்களே. அவர்களின் ஆற்றலும், அர்ப்பணிப்பும், துணிச்சலும் ஒன்றிணையும் போது, ஒரு புதிய மற்றும் சீர்திருத்தப்பட்ட சமூகம் உருவாவது உறுதி. இளைஞர் சக்தி என்பது வெறும் எண்ணிக்கை அல்ல, அது ஒரு சமூகத்தின் மாற்றத்திற்கான அடிப்படை ஆதாரம்.






# பெண்ணியமும் ஆசிரியத்துவமும்

N.கவின்ஜா
விரிவுரையாளர்

பெண்ணியம் என்பது பெண்களுக்கு சமூக, அரசியல், பொருளாதார மற்றும் கல்வி துறைகளில் ஆண்களுக்கு இணையான உரிமைகளும் வாய்ப்புகளும் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் கருத்தாகும். சமூகத்தில் நீண்ட காலமாக நிலவி வந்த பாலின சமத்துவமின்மை பெண்களின் முன்னேற்றத்தை தடை செய்துள்ளது. இந்நிலையில் கல்வி துறையில் பெண்ணியக் கருத்துகள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. குறிப்பாக ஆசிரியத்துவம் எனும் தொழில், சமத்துவம் மற்றும் சமூக மாற்றத்தை உருவாக்கும் ஒரு சக்திவாய்ந்த கருவியாகக் கருதப்படுகிறது. எனவே, பெண்ணியமும் ஆசிரியத்துவமும் ஒன்றோடொன்று தொடர்புடைய முக்கியமான கருத்துகளாக விளங்குகின்றன.

பெண்ணியம் என்பது பெண்களின் உரிமை-களை பாதுகாக்கவும், அவர்களின் சமூக நிலையை மேம்படுத்தவும் உருவான ஒரு சிந்தனையும் சமூக இயக்கமும் ஆகும். பெண்கள் கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல் மற்றும் சமூக துறைகளில் சம உரிமை பெற வேண்டும் என்பதே இதன் அடிப்படை நோக்கமாகும். பெண்ணியக் கருத்துகள் பெண்களின் திறமைகளை வெளிக்கொணரவும், சமூகத்தில் அவர்களுக்கு சமமான மதிப்பையும் மரியாதையையும் பெற வழிவகுக்கின்றன. இக்கருத்து கல்வி துறையில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு, பாலின சமத்துவத்தை ஊக்குவிக்கும் வகையில் செயல்படுகிறது.

ஆசிரியத்துவம் என்பது மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு மற்றும் நற்பண்புகளை வளர்க்கும் உயர்ந்த தொழிலாகும். ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சியோடு மட்டுமல்லாமல் அவர்களின் சமூக விழிப்புணர்வையும் உருவாக்குகின்றனர். ஒரு நல்ல ஆசிரியர் மாணவர்களை சமத்துவம், நீதிமுறை மற்றும் மனிதநேய மதிப்புகளுடன் வளர்க்கும் பொறுப்பை ஏற்றிருக்கிறார். எனவே ஆசிரியர்களின் கற்பித்தல் முறைகள் மாணவர்களின் சிந்தனை முறையிலும் சமூகக் கண்ணோட்டத்திலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

### பெண்ணியமும் ஆசிரியத்துவமும் இடையிலான தொடர்பு

பெண்ணியக் கருத்துகள் கல்வித்துறையில் பல மாற்றங்களை உருவாக்கியுள்ளன. குறிப்பாக பெண் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது பெண்களின் கல்வி முன்னேற்றத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் வழிவகுத்துள்ளது. பெண் ஆசிரியர்கள் மாணவிகளுக்கு முன்மாதிரியாக இருந்து அவர்களை கல்வியில் முன்னேற ஊக்குவிக்கின்றனர். மேலும், வகுப்பறை சூழலில் ஆண்–பெண் பாகுபாடு இல்லாமல் மாணவர்களை சமமாக நடத்துவது பெண்ணியக் கல்வி அணுகுமுறையின் முக்கிய அம்சமாகும்.



பெண்ணியக் கண்ணோட்டத்துடன் கூடிய ஆசிரியத்துவம் மாணவர்களுக்கு பாலின சமத்துவம் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குகிறது. பாடத்திட்டங்களில் பெண்களின் சாதனைகள் மற்றும் சமூக பங்களிப்புகள் இடம்பெறுவது மாணவர்களுக்கு சமத்துவ சிந்தனையை வளர்க்க உதவுகிறது. இதன் மூலம் மாணவர்கள் பாலின அடிப்படையிலான முன்னறிவுகோள்களிலிருந்து விடுபட்டு சமத்துவ மனப்பாங்குடன் வளர முடிகிறது.

கல்வி துறையில் பெண்ணிய அணுகுமுறை பயன்படுத்தப்படும்போது ஆசிரியர்கள் மாணவர்களை பாலின வேறுபாடின்றி சமமாக நடத்த வேண்டும். மாணவிகளின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் அவர்களுக்கு ஊக்கமும் ஆதரவும் வழங்கப்பட வேண்டும். வகுப்பறையில் மாணவர்கள் அனைவரும் தங்களது கருத்துகளைத் தாராளமாக வெளிப்படுத்தும் சூழல் உருவாக்கப்பட வேண்டும். மேலும், பெண்களின் வரலாறு, சாதனைகள் மற்றும் சமூக பங்களிப்புகள் குறித்து மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படுவது முக்கியமானதாகும்.

---பெண்ணியமும் ஆசிரியத்துவமும் இணைந்து பால்நிலை சமத்துவம், சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தலை கல்விச் சூழலில் முன்னெடுக்கின்றன. பெண் ஆசிரியர்கள் பாடசாலைகளில் முன்மாதிரிகளாகத் திகழ்ந்து, பின்தங்கிய நிலையிலிருந்து பெண்களைக் கல்வியும் வேலைவாய்ப்பும் மூலம் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல உதவுகிறார்கள். பெண்ணியக் கல்வி என்பது பாலின பாகுபாடற்ற, சமத்துவமான கற்றல் சூழலை உருவாக்குவதையும், பெண்களின்உரிமைகளை உணர்த்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பெண்ணியமும் ஆசிரியத்துவமும் முக்கிய அம்சங்கள்:

**சமத்துவக் கல்வி:** பெண்ணிய ஆசிரியத்துவம் கல்வியில் ஆண், பெண் இருபாலரும் சமமானவர்கள் என்ற கருத்தை வலுப்படுத்துகிறது.

**பால்நிலை சமத்துவம்:** வகுப்பறையில் பாலின சார்புநிலை இல்லாமல், அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்குவதை உறுதி செய்கிறது

**விழிப்புணர்வு:** மாணவர்களிடையே பெண் உரிமைகள், சமூக நீதி, மற்றும் பாலியல் வன்முறைகளுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

**முன்மாதிரிகள்:** பெண் ஆசிரியர்கள், மாணவிகளுக்கு தன்னம்பிக்கை மற்றும் சுயாதீனமாகச் செயல்படும் திறனை ஊட்டி, சமூக மாற்றத்திற்கான தூண்டுகோலாகச் செயல்படுகின்றனர்.

**கல்வி மேம்பாடு:** கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் பெண்கள் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள பெண்ணிய அணுகுமுறை துணைநிற்கிறது.

பெண்ணியக் கருத்துக்களைக் கற்பித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் மூலம், பெண் ஆசிரியர்கள் ஒரு சமத்துவமான சமூகத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

மொத்தத்தில் பார்க்கும்போது பெண்ணியமும் ஆசிரியத்துவமும் சமூக முன்னேற்றத்திற்கு முக்கிய பங்காற்றும் இரு தொடர்புடைய கருத்துகளாகும். கல்வி என்பது சமத்துவத்தை உருவாக்கும் மிகச் சிறந்த வழிகளில் ஒன்றாகும். ஆசிரியர்கள் பெண்ணியக் கண்ணோட்டத்துடன் செயல்பட்டால் மாணவர்களில் பாலின சமத்துவம், மனிதநேயம் மற்றும் சமூக பொறுப்புணர்வு போன்ற மதிப்புகள் வளர்க்கப்படலாம். இதன் மூலம் பெண்களின் அதிகாரமளிப்பும் சமூக முன்னேற்றமும் உறுதியாகும். எனவே கல்வி துறையில் பெண்ணியக் கருத்துகளை ஒருங்கிணைப்பது இன்றியமையாத ஒன்றாகக் கருதப்படுகிறது.

# சமூகவிஞ்ஞான மன்றம் நிர்வாகம்



திரு க.சிவகுமார்
போசகர்



திரு ஜனகன்
ஆலோசகர்



திரு ஹரிஸ்குமார்
ஆலோசகர்



திருமதி S.கார்த்திகா
ஆலோசகர்



திரு சிவரூபன்
ஆலோசகர்

# ஆசிரிய மாணவர்களின் தலைமைத்துவம்



அஹலம்
தலைவர்



உ.ருசாந்தினி
உபதலைவர்



பா.சுரேகா
செயலாளர்



தருசிகா
உபசெயலாளர்



அனோத்
பொருளாளர்



ந.காந்தரூபன்
இதழாசிரியர்